# ??????????

**Author :** admin

**Date :** April 16, 2016



## சித்ரா பௌர்ணமி சிறப்பு நிகழ்ச்சிகள்...

அன்புடையீர்,

**தாய் என்று சொன்னாலே அர்ப்பணிப்பு தான்** எல்லோர் மனதிலும் முன் நிற்கும். பத்து மாதம் சுமந்து தான் பெற்றெடுத்த பிள்ளைகளின் நலனுக்காகத் தன்னையே கரைத்துக் கொள்பவள் தாய். சந்தனம் தன்னை இழைத்துக் கொண்டு மணம் தருவது போல், கற்பூரம் தன்னைக் கரைத்துக் கொண்டு தெய்வீக மணம் பரப்புவது போல்–தாய் ஆகப்பட்டவள் தன்னையே கரைத்துக் கொண்டு தம் மக்களைக் காக்கின்றாள்.

காஞ்சிபுரம் அடுத்த உள்ளாவூர் கிராமத்தில் அவதரித்த **உத்தமி தாயான ஸ்ரீமதி கோமளவல்-க்கும்** - வாலாஜாபாத் அடுத்த கம்பராஜபுரம் கிராமத்தில் அவதரித்து திமிரி ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்த உத்தமர் **ஸ்ரீ. உ.வே. ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்களுக்கும் திருமகனாக அவதரித்து இன்றைக்கு பிரமாண்டமான ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடம் கண்டவர் கயிலை ஞானகுரு டாக்டர் ஸ்ரீமுரளிதர ஸ்வாமிகள்.** தாய் ஸ்ரீமதி கோமளவல்–யின் வேண்டுகோளினாலும், ஆசியினாலும் தான் இந்தப் புனித பீடம் உருவானது. புற்றுநோயின் பிடியில் சிக்கித் தவித்த தன் தாய்க்கு கடைசி காலத்தில் கொடுத்த வாக்குப்படி இந்த பீடம் உருவானது. **தான் பட்ட அவஸ்தையை இந்த உலகில் இன்னொரு ஜீவன் அனுபவிக்கக் கூடாது** என்பதற்காக இந்த பிரபஞ்சத்தின் ஆதி மருத்துவரான ஸ்ரீதன்வந்திரி பகவானுக்கு ஒரு பீடம் அமைக்க வேண்டினார் அந்தத் தாய். அவரது அவா நிறைவேறி உள்ளது. அந்த தாயின் ஆசியினால் தான் – அவர் போட்ட விதைதான் இன்று மாபெரும் விருட்சமாகவும், பார் புகழும் ஆரோக்ய சின்னமாகவும் இந்த பீடம் விளங்கி வருகிறது. அத்தகைய **பெற்றோரின் 20வது ஆண்டு குரு பூஜை வருகிற 21.4.2016 வியாழக்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று நடைபெறுகிறது.**

உறவினர்கள் ஒத்துழைப்பு மற்றும் தன்வந்திரி குடும்பத்தினரின் உதவி, பக்தர்களின் பங்களிப்பினால் 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ந்தேதி பக்தர்கள் பல மொழிகளில் கைப்பட எழுதி அனுப்பிய மகா மந்திரங்களை கர்ப்ப கிரஹத்தின்கீழ் மந்திரமே யந்திரமாக பிரதிஷ்டை செய்து, 15.12.2004ல் ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து **ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தை எங்களின் குருநாதர் கயிலை ஞானகுரு டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள்** நிறுவினார்.

தாயின் ஆணையை சிரமேற்கொண்டு ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடம் நிறுவி அதில் ஸ்ரீ தன்வந்திரி பெருமாள், 73 பரிவார மூர்த்திகள் மற்றும் 468 சித்தர்கள் சிவ–ங்க ரூபத்தில் சூட்சும முறையில் பிரதிஷ்டை செய்து கோ சாலை, அன்னதான கூடம், சமய, சமுதாய பணிகள் செய்து வருவதுடன் அனுதினமும் சிறப்பு ஹோமங்களும், பிரதோஷ காலங்களிலும், பௌர்ணமி காலங்களிலும் விசேஷமான முறையில் உலக நலனுக்காக செய்து வருகிறார். ஒவ்வொரு சித்ரா பௌர்ணமியிலும் ஹோம குண்டங்கள் அமைத்து விசேஷ யாக பீடத்தில் நடைபெற்று வருகிறது. அந்த

வகையில் இவ்வாண்டு **சித்ரா பௌர்ணமியில் பிரமாண்டமான குண்டத்தில் வேத பண்டிதர்கள், மகான்கள், சாதுக்கள் அமர்ந்து 108 சித்தர்களுக்கான சிறப்பு வேள்வி** நடைபெற உள்ளது.

பெற்றோரின் ஆசிகளை நிறைவேற்றிய ஸ்வாமிகள் இந்த பீடத்தை பெற்றோர்களுக்கு சமர்ப்பணம் செய்யும் விதத்திலும், நன்றி தெரிவிக்கும் வகையிலும், பெற்றோர்களின் திருவுருவச் சிலைகளை வைத்து ஓர் ஆலயம் அமைத்து தந்தையும், குருவுமானவரின் **100ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி மணிமண்டபம் அமைத்து திருவுருவச் சிலைகளை வருகிற 21.4.2016 வியாழக்கிழமை காலை 9.00 to 10.00 மணிக்குள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.**

**முன்னிலை:**

**கல்விச் செம்மல், உயர்திரு. K.V.குப்புசாமி அவர்கள்**

தலைவர், RVS கல்வி நிறுவனங்கள், சூலூர், கோவை.

அதுசமயம் குடும்பத்தாரும், தன்வந்திரி சேவார்த்திகளும், ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். மேலும் பகல் 12.30 மணியளவில் **பெற்றோர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள மணி மண்டபத்தில் 20ஆம் ஆண்டு ஸ்ரீமகேஸ்வர பூஜை** நடைபெற உள்ளது. அவ்வமயம் மகான்களும், சாதுக்களும், சன்னியாசிகளும் ஆசி புரிய காத்திருக்கிறார்கள்.

யார் யாருக்கு என்னென்ன கிடைக்க வேண்டும் என்று ஸ்ரீதன்வந்திரி பகவானின் சங்கல்பம் இருக்கிறதோ, அனைவருக்கும் இந்த பிரசாதம் கிடைக்கும். அன்றைய தினம் வருகின்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் ஸ்ரீ தன்வந்திரி பகவானின் அருளால் அவரது பிரசாதமாகவழங்கப்படும். இந்த புண்ணிய கைங்கர்யத்தில் நீங்களும் பங்களித்து பயன் பெறலாம்.

**பெற்றோர்களுக்கு உரிய முக்கியத்துவம் தர வேண்டும் என்று எண்ணும் அனைத்து தரப்பினரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு குடும்பத்தில் பாசத்தையும், அன்பையும் கொண்டு வர மகிழ்ச்சியோடு வர வேண்டுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.**

***அழைத்து மகிழும்,***

திருமதி & திரு. **நிர்மலா முரளிதரன்**

திருமதி & திரு. **மாலதி பிரசன்னா,** குழந்தைகள்: **பிரக்ருதி, பிரணதி,**

திருமதி & திரு. **அனுராதா முரளி,** மழலை: **மித்ரா**

**தன்வந்திரி குடும்பத்தினர், தன்வந்திரி சேவார்த்திகள்.**



ஸ்ரீ உ.வே. K.B. ஸ்ரீனிவாசன் - ஸ்ரீமதி கோமளவல்லி -
குடும்ப வகையறாக்கள்

ஸ்ரீ & ஸ்ரீமதி கீதா ரங்கநாதன் & குடும்பத்தினர், சென்னை.
புஷ்பா சீனிவாசராகவன் & குடும்பத்தினர், காஞ்சிபுரம்.
ஜானகவல்லி- வரதேசிகன் & குடும்பத்தினர், காஞ்சிபுரம்.
ஜெயலக்ஷ்மி லக்ஷ்மிநரசிம்ஹன் & குடும்பத்தினர், வாலாஜாபேட்டை.
தங்கம்மா சந்தானம் & குடும்பத்தினர், சென்னை.
வனஜா சீனிவாசன் & குடும்பத்தினர், சென்னை.
லக்ஷ்மி கோபாலன் & குடும்பத்தினர், வாலாஜாபேட்டை.
பிரேமாவதி ராமன் & குடும்பத்தினர், சென்னை.
ராஜலக்ஷ்மி சேஷாத்ரி & குடும்பத்தினர், [illegible].
ரேவதி அமுதன் & குடும்பத்தினர், சென்னை.
சுந்தரி வரதராஜன் & குடும்பத்தினர், சென்னை.
ராஜலக்ஷ்மி ரங்கராஜன் & குடும்பத்தினர், சென்னை.
பத்மப்ரியா கண்ணன் & குடும்பத்தினர், காஞ்சிபுரம்.
ஸ்ரீமதி வரதராஜன் & குடும்பத்தினர், சென்னை.
சுகன்யா ராமதுரை & குடும்பத்தினர், சென்னை.
உமா சம்பத் & குடும்பத்தினர், சேலம்.
விஜயலக்ஷ்மி ரவி & குடும்பத்தினர், திருச்சானூர்.
அலமேலு ரமேஷ் & குடும்பத்தினர், சென்னை.
சித்ரா ஸ்ரீனிவாசன் & குடும்பத்தினர், திருமலை.
இந்துமதி ஸ்ரீதரன் & குடும்பத்தினர், பூனா.
லக்ஷ்மி பக்தவச்சலம் & குடும்பத்தினர், காஞ்சிபுரம்.
வசுமதி செல்லப்பா & குடும்பத்தினர், வாலாஜாபேட்டை.
ஆனந்தி முரளிதரன் & குடும்பத்தினர், மதுராந்தகம்.
இந்துமதி ஜானகிராமன் & குடும்பத்தினர், சென்னை.
மாலினி சம்பத் & குடும்பத்தினர், சென்னை.
விஜயலக்ஷ்மி சுந்தர் & குடும்பத்தினர், சென்னை.
தீபா பூபால் & குடும்பத்தினர், கலிபோர்னியா.
கவிதா [illegible] & குடும்பத்தினர், சென்னை.
சுதா சுந்தர் & குடும்பத்தினர், சென்னை.
கீதா பரிமளரங்கன் & குடும்பத்தினர், சென்னை.
கிரிஜா பட்டாபிராமன் & குடும்பத்தினர், சென்னை.

மற்றும்
செல்வர் G.பத்ரி நாராயணன்,
B.ஸ்ரீவத்சன், V.பாலாஜி,
S.கோதண்டராமன்

நிகழ்ச்சி நிரல்

20.04.2016 புதன்கிழமை

மாலை 6.00 மணிக்கு .. யாகசாலை பூஜைகள் ஆரம்பம்

21.04.2016 வியாழக்கிழமை

காலை 8.00 to 10.00 மணிக்குள் .. திருவுருவச் சிலைகள் பிரதிஷ்டை & மணி மண்டபம் திறப்பு
காலை 11.00 to 12.00 மணிக்குள் .. 108 சித்தர்கள் யாகம், அபிஷேகம்
பகல் 12.00 to 1.00 மணிக்குள் .. மகேஸ்வர பூஜை, சிறப்பு அன்னதானம்